2015 செப்டம்பர் 16]

29 தொழிற்பேட்டைகளை அமைத்தது மாண்புமிகு அம்மாவின் அரசு என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 14 மாத்திரம்தான் தொடங்கப்பட்டன. அதுவும் சில இடங்களில் இடங்கள் சரியாக தேர்வு செய்யப்படாத சில சூழ்நிலைகள் இருந்த காரணத்தால், சில இடங்களிலே இடம் எடுக்கப்படாமல், தொழிற்பேட்டைகளை முழுமையாக அமைக்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, எங்கெல்லாம் இடங்கள் கிடைக்காமல் இருக்கிறதோ, அங்கெல்லாம் இடங்களைத் தேர்வு செய்கிற நல்ல பணியிலே அம்மாவின் அரசு ஈடுபட்டிருக்கிறது என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 275, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

275—

மறுவாழ்வு மையம்

***56280— திரு. மு.வீ. கருப்பையா:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, சோழவந்தானில் மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு மறுவாழ்வு மையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு தொழிற்பயிற்சியுடன்கூடிய மறுவாழ்வு மையம் அமைக்கப்பட வேண்டும் என்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி மதுரை மாவட்டம், திருமோகூர் என்ற இடத்தில் ஆண், பெண் இருபாலருக்கும், மதுரை மாவட்டம், புதூர் என்ற இடத்தில் பெண்களுக்காக மட்டும் தொழிற்பயிற்சி மற்றும் தங்கும்

வசதியுடன்கூடிய மறுவாழ்வு மையம் செயல்பட்டு வருவதால், சோழவந்தானில் மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு மறுவாழ்வு மையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.*

திரு. மு.வீ. கருப்பையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். ஏழைகளின் வாழ்வு செழித்திட ஏராளமான திட்டங்கள் தீட்டி சாதனைகளைப் படைத்தவராம், ஓய்வறியா உழைப்பினிலே உயர்ந்திருக்கும் கோபுரமாய் என்றென்றும் வாழ்பவராம் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 10-25

"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது, அதனினும் அரிது கூன் குருடு செவிடு நீங்கிப் பிறத்தல் அரிது" என்ற ஔவை மூதாட்டியின் பாடலுக்கேற்ப மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியில் அனைத்துத் துறைகளிலும் சரித்திர சாதனைகளைப் படைத்துவரும் இந்தவேளையில், ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம் என்ற அறிஞர் அண்ணாவின் பொன்மொழிகளுக்கேற்ப உடல் ஊனமுற்றோர் வாழ்விலே ஏராளமான நலத் திட்டங்களை வழங்கிவரும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் வைகை நதி பாய்ந்து வளம் கொழிக்கும் சோழவந்தான் பகுதியில் மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளின் வாழ்வு மலர மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மன வளர்ச்சி குன்றியவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் நலன்மீது அக்கறை கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று ஒரு மறுவாழ்வு மையம் அமைத்துத் தர முன்வருவார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

2015 செப்டம்பர் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி மதுரை மாவட்டத்தில் மொத்தம் 10 தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு நிதி உதவி வழங்கி அவர்களுக்கு ஆரம்பநிலை பயிற்சி, தொழிற்பயிற்சி ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன. 10 மன வளர்ச்சி குன்றியோருக்கான பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. அன்பகம், அட்சயா, ரெட்சன், கிட்ஸ், ஆகாஷ், ஒய்.எம்.சி.ஏ., ஷைன், நேயம், டெட்டி, சி.எஸ்.ஐ., ஆகியவை உள்ளன. இவை இல்லாமல் செல்லமுத்து என்ற ஓர் அறக்கட்டளை உள்ளது. தன்னார்வத் தொண்டு நிறுவனத்தினால் நடத்தப்படும் இந்த அறக்கட்டளையின்மூலம் 14 வயதுக்கு மேற்பட்ட மன வளர்ச்சி குன்றிய இருபாலருக்கான இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. இதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 9,86,800 ரூபாய் அளித்திருக்கிறார்கள். இமானுவேல் அறக்கட்டளை என்னும் தொண்டு நிறுவனத்தினால் நடத்தப்படும் 14 வயதுக்கு மேற்பட்ட மன வளர்ச்சி குன்றிய பெண்களுக்கான இல்லங்கள் இந்தத் திட்டத்தின்கீழ் செயல்பட்டு, அதற்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் ரூ.9,66,800/- ஆண்டு ஒன்றுக்கு தொடர் செலவினமாக வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டு, வழங்கப்பட்டு வருகின்றது. இந்தத் தொண்டு நிறுவனங்களோடு தொடர்புகொண்டு அவர்கள் மூலமாக சோழவந்தானில் எத்தனை மன வளர்ச்சி குன்றிய குழந்தைகள் இருக்கிறார்கள் என்பதைக் கணக்கிட்டு, அதனடிப்படையில் செயல்படுத்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.*

திரு. மு.வீ. கருப்பையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் மதுரை மாவட்டத்தில் மன வளர்ச்சி குன்றிய*

குழந்தைகள், ஆண், பெண் இருபாலரும் எத்தனை பேர் என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மொத்தம் 42 மன வளர்ச்சி குன்றியோருக்கான மறுவாழ்வு இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் 16 இல்லங்கள் ஆண்களுக்காகவும், 19 இல்லங்கள் பெண்களுக்காகவும், 7 இல்லங்கள் இருபாலருக்காகவும், ஆக மொத்தம் 42 இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த இல்லங்கள்மூலம் 1,640 பேர் மொத்தம் பயன் பெற்று வருகிறார்கள். மதுரை மாவட்டத்தில் மட்டும் பயன் பெறுகின்ற பிள்ளைகளின் எண்ணிக்கை மொத்தம் 360 என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 276, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

276—

பொறியியல் கல்லூரி

***38198—திரு. கே. பொன்னுசாமி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாராபுரம் தொகுதியில் பொறியியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் மொத்தம் 576 பொறியியல் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. அரசு பொறியியல் கல்லூரிகள் 10 செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அரசு நிதி